ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ மற்றிருந்தீர் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ‖ மற்றிருந்தீர் ‖

"சீதரனிருந்துழிச் செலுத்துவீர் எனை" எனக் கோதை தமர்க்குக் கூறிய துணிபு

‡மற்றிருந்தீர்கட்கறியலாகா⋆
மாதவன் என்பதோர் அன்பு தன்னை⋆
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம்⋆
ஊமையரோடு செவிடர் வார்த்தை⋆
பெற்றிருந்தாளை ஒழியவே போய்ப்⋆
பேர்த்தொரு தாயில் வளர்ந்த நம்பி⋆
மற் பொருந்தாமற் களம் அடைந்த⋆
மதுரைப் புறத்தென்னை உய்த்திடுமின் (1)

நாணி இனி ஓர் கருமம் இல்லை⋆
நால் அயலாரும் அறிந்தொழிந்தார்⋆
பாணியாதென்னை மருந்து செய்து⋆
பண்டு பண்டாக்க உறுதிர் ஆகில்⋆
மாணி உருவாய் உலகளந்த⋆
மாயனைக் காணில் தலை மறியும்⋆
ஆணையால் நீர் என்னைக் காக்க வேண்டில்⋆
ஆய்ப்பாடிக்கே என்னை உய்த்திடுமின் (2)

தந்தையும் தாயும் உற்றாரும் நிற்க⋆
தனி வழி போயினாள்! என்னும் சொல்லு⋆
வந்த பின்னைப் பழி காப்பரிது⋆
மாயவன் வந்துருக் காட்டுகின்றான்⋆
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக்⋆
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற⋆
நந்தகோபாலன் கடைத் தலைக்கே⋆
நள் இருட்கண் என்னை உய்த்திடுமின் (3)

www.prapatti.com

அங்கைத் தலத்திடை ஆழி கொண்டான்⋆
அவன் முகத்தன்றி விழியேன் என்று⋆
செங்கச்சுக் கொண்டு கண் ஆடை ஆர்த்துச்⋆
சிறு மானிடவரைக் காணில் நாணும்⋆
கொங்கைத் தலம் இவை நோக்கிக் காணீர்⋆
கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா⋆
இங்குத்தை வாழ்வை ஒழியவே போய்⋆
யமுனைக் கரைக்கென்னை உய்த்திடுமின் (4)

ஆர்க்கும் என்னோய் இதறியலாகாது⋆
அம்மனைமீர்! துழதிப் படாதே⋆
கார்க் கடல் வண்ணன் என்பான் ஒருவன்⋆
கை கண்ட யோகம் தடவத் தீரும்⋆
நீர்க் கரை நின்ற கடம்பை ஏறிக்⋆
காளியன் உச்சியில் நட்டம் பாய்ந்து⋆
போர்க் களமாக நிருத்தம் செய்த⋆
பொய்கைக் கரைக்கென்னை உய்த்திடுமின் (5)

கார்த் தண் முகிலும் கருவிளையும்⋆
காயா மலரும் கமலப் பூவும்⋆
ஈர்த்திடுகின்றன என்னை வந்திட்டு⋆
இருடீ கேசன் பக்கல் போகே என்று⋆
வேர்த்துப் பசித்து வயிறசைந்து⋆
வேண்டடிசில் உண்ணும் போது⋆ ஈதென்று
பார்த்திருந்து நெடு நோக்குக் கொள்ளும்⋆
பத்த விலோசனத்துய்த்திடுமின் (6)

வண்ணந் திரிவும் மனங்குழைவும்⋆
மானம் இலாமையும் வாய் வெளுப்பும்⋆
உண்ணல் உறாமையும் உள் மெலிவும்⋆
ஓத நீர் வண்ணன் என்பான் ஒருவன்⋆
தண்ணந் துழாய் என்னும் மாலை கொண்டு⋆
சூட்டத் தணியும்⋆ பிலம்பன் தன்னைப்

பண் அழியப் பலதேவன் வென்ற⋆
பாண்டி வடத்தென்னை உய்த்திடுமின் (7)

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்றான்⋆
காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான்⋆
பற்றி உரலிடை ஆப்பும் உண்டான்⋆
பாவிகாள்! உங்களுக்கேச்சுக் கொலோ⋆
கற்றன பேசி வசவுணாதே⋆
காலிகள் உய்ய மழை தடுத்துக்⋆
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற⋆
கோவர்த்தனத்தென்னை உய்த்திடுமின் (8)

கூட்டில் இருந்து கிளி எப்போதும்⋆
கோவிந்தா! கோவிந்தா! என்றழைக்கும்⋆
ஊட்டக் கொடாது செறுப்பன் ஆகில்⋆
உலகளந்தான்! என்றுயரக் கூவும்⋆
நாட்டில் தலைப் பழி எய்தி⋆ உங்கள்
நன்மை இழந்து தலை இடாதே⋆
சூட்டுயர் மாடங்கள் சூழ்ந்து தோன்றும்⋆
துவராபதிக்கென்னை உய்த்திடுமின் (9)

‡மன்னு மதுரை தொடக்கமாக⋆
வண் துவராபதி தன் அளவும்⋆
தன்னைத் தமர் உய்த்துப் பெய்ய வேண்டித்⋆
தாழ் குழலாள் துணிந்த துணிவை⋆
பொன் இயல் மாடம் பொலிந்து தோன்றும்⋆
புதுவையர் கோன் விட்டுசித்தன் கோதை⋆
இன் இசையால் சொன்ன செஞ்சொல் மாலை⋆
ஏத்த வல்லார்க்கிடம் வைகுந்தமே (10)

॥ஆண்டாள் திருவடிகளே சரணம்॥

www.prapatti.com